
www.padippakam.com

# காலைக்
# கதிர்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# கதிர் வழி...

ஒரு சமூகத்தின் விழிப்புணர்ச்சியானது கிராமிய மட்டத்திலேயே ஆரம்பமாக வேண்டும் என்பது ஆன்றோர் வாக்கு. அதற்கொப்ப மறுமலர்ச்சி மன்றத்தினது பணியதும் கிராம மட்டத்திலிருந்து ஆரம்பமாகி வேரூன்றியிருப்பது அனைவரும் அறிந்ததே.

ஒரு கிராமியத்தின் விழிப்புணர்வை ஒளியூட்ட செய்வனவாக பல செயல்திட்டங்களை உருவாக்கலாம். அவ்வகையில் இச்சிறிய றோனியோ இதழும் தனது பணியை திறம்பட செய்ய முனையும் முயற்சியின் முதற்கட்டமாகவும் காலைக்கதிரின் மூன்றாவது இதழாகவும் இச்சிறு இதழை உங்கள்முன் சமர்ப்பிக்கின்றோம்.

இவ்விதழானது எமது கிராமியங்களை ஒன்றிணைக்கும் ஊடகமாகவும் எமது சிறார், மாணவர், ஆசிரியர், பெற்றோர், மன்ற அங்கத்தவர்கள் எல்லோரினதும் பங்களிப்பும் ஒத்துழைப்பும் ஆதரவையும் பெற்றே மாதம் ஒரு கதிராக வெளிவரவுள்ளது.

முக்கியமாக எமது பகுதியின் சிறுசிறு முன்னேற்ற செயற்பாடுகளை எவ்வாறு செய்வது... முன்னேற்ற செயற்பாடுகளுக்கு பங்களிப்புகளை எவ்வாறு வழங்க முடியும் என்பதை நலன்விரும்பிகளுக்கு தெரிவிப்பது... அத்தோடு கலை இலக்கிய வெளிப்பாடுகளையும் இணைத்து வெளிவரும்.

இன்றைய காலகட்டத்தில் இலங்கையில் சிற்றிதழ்களை வெளியிடுவது முயற்கொம்பான வேலையாகும். இத்தகைய காலகட்டத்தில் எமது இச்சிற்றிதழும் தொடர்ந்துவர வாசகரின் ஒத்துழைப்பும் எமது பகுதிவாழ் மக்களின் பங்களிப்பும் அவசியமானதாகும். இதற்காக வாசகர்கள் இவ்விதழுக்கு அங்கத்துவ சந்தாப்பணத்தை வழங்கிஇவ்விதழின் தொடர்ச்சியான வரவை உறுதிப்படுத்துவதோடு ஆதரவையும் வழங்குவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

************************

மானிட வாழ்வைப் பாடுவோம்
மனிதத்துவத்தை தேடுவோம்

**************************

-இதழாசிரியர்- சாந்தையூர் சக்திவேல்



படிப்பகம்

www.padippakam.com

செய்திச் சரம்...செய்திச் சரம்...செய்திச் சரம்...

* ரூபவாகினியில் ஒளிபரப்பப் பட்ட 'காணிக்கை', 'உறவுகள்' 'எதிர்பாராதது' ஆகிய ரெலிராமாக்கள் (தொலைநாடகம்) வீடியோ ஒலியிழையாக (கசற்) வெளிவந்துள்ளது. வெளிநாடு வாழ் தமிழர்க்கு இது வரப்பிரசாதமாக அமையும். இந் நாடகங்களை நெறிப்படுத்தியவர் இலங்கையின் வானொலி, திரை, தொலைக்காட்சிப் புகழ் எஸ். ராமதாஸ்.

* வடக்கு—கிழக்கில் அமைதியற்ற சூழலிலும் கலைமுயற்சிகள் நிகழ்கின்றன. சென்றவருடம் காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் நடந்த வாணிவிழாவில் 20 பெண்கள் பங்குபற்றிய ஒன்றரை மணிநேர வீதிநாடகம் "ஊர்பேர் இல்லாதவன்" அரங்கேறியது. இன்றைய சூழல் அமைவில் அகதிகள் பரவி ஓடுவதை சித்தரிக்கும் இந்நாடகத்தை நெறிப்படுத்தியவர் சோ. தேவராஜா. இது மறுமலர்ச்சி மன்றத்தின் அண்மைய தயாரிப்பு.

* மறுமலர்ச்சி மன்றத்தில் நடந்த வாணிவிழாவில் 'முதல் செல்வம்' எனும் இன்னொரு நாடகமும் அரங்கேறியது. த. நாகேந்திரன் கற்பனையில் உருவாகிய இந்நாடகத்தை திருமதி பா. பவானி நெறிப்படுத்த முற்றிலும் சிறுவர்கள் பங்கெடுத்தனர். இது இன்றைய சிறுவர்களின் நிலையை சித்தரித்தது.

* பனிப்புலம் பகுதியில் இதுவரை நிகழ்ந்த கலைவிழாக்களில் பெண்கள் பட்டிமன்றத்தில் கலந்து கொண்டதாக அறிவுக்கெட்டிய வரையில் தெரியவில்லை. ஆனால் இம்முறை வாணிவிழாவில் 'கல்வியா, செல்வமா, வீரமா? என்ற தலைப்பிலான பட்டிமன்றத்தில் முதல்முதலாக பெண்கள் பங்குகொண்டு ஊர்மக்களின் கவனத்தையும் ஈர்ந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

* காகிதப்புலிகள் (மீண்டும் பாரதி) நாடகப் புகழ் நடிகரும் யாழ். நாடக அரங்கக்கல்லூரி நடிகருமான எஸ். கே. தயாளன் கடந்த வருடம் நவம்பரில் அவுஸ்ரேலியாவில் மேடையேறிய மாவை நித்தியானந்தனின் 'ஐயா எலக்சன் கேட்கிறார்' (நாடகம்), கொழும்பு மெயில் (பாட்டும் கதையும்) ஆகிய நிகழ்வுகளில் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்திருக்கிறார்.

செய்திச் சரம்...செய்திச் சரம்...செய்திச் சரம்...



படிப்பகம்

www.padippakam.com

*****
*******************************************************
செய்திச் சரம்...செய்திச் சரம்...செய்திச் சரம்...
*******************************************************

* கடந்த வருடம் யூன் மாதம் காலையடி குடும்பநல ஒருங்கிணைப்புத் திட்டக்குழுவினரின் அறிமுகவிழா நிகழ்ந்த போது அந்நிகழ்வில் குழந்தை ம.சண்முகலிங்கம் எழுதிய 'மாதொருபாகம்' எனும் நாடகம் மேடையேற்றப்பட்டது. இந்நாடகம் முழுக்கமுழுக்க பெண்களின் பங்களிப்பில் உருவாகியது. இந்நாடகத்தை நெறிப்படுத்தியவரும் பெண் ஒருவரே. அவர் திருமதி. தே.கலாலட்சுமி.

* கடந்தவருடம் யூன் மாதம் சாந்தை குடும்பநல ஒருங்கிணைப்புத் திட்டக்குழுவினரின் அறிமுகவிழா சாந்தை சித்தி விநாயகர் ச.ச.நிலையத்தில் நடைபெற்றபோது அவ்விழாவில் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'தாயுமாய் நாயுமானாய் எனும் நாடகம் அரங்கேறியது. இந்நாடகத்தில் ஆண்களும் பெண்களும் இணைந்து பங்கேற்றனர். இந்நாடகத்தின் நெறியாள்கை சோ.தேவராஜா.

* அண்மையில் கொழும்பில் நிகழ்ந்த ஒரு நூல்வெளியீட்டு விழாவில் பேசிய இந்து பண்பாட்டலுவல்கள் தமிழ் விவகார இராஜாங்க அமைச்சர் திரு தேவராஜா அவர்கள், கிராமிய கலைகளைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் எனவும் அதற்கு தன்னால் இயன்ற உதவிகளை செய்ய தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

* தென்லண்டனில் உள்ள தமிழ்ப்பாடசாலையினால் இராமாயணத்தின் ஒருபகுதி நாடகமாக தயாரித்து நவம்பர் 24ந் திகதி (1990) வெற்றிகரமாக மேடையேற்றப்பட்டது. முன்னைய இலங்கை வானொலி அறிவிப்பாளர் சிவபாத சுந்தரத்தினால் இந்நாடகம் தயாரிக்கப்பட்டு நெறிப்படுத்தப்பட்டது. நடனங்கள் கலாசேத்ராவில் பயின்ற யொவானி யோசப்பின் வழிநடத்தலிலும் இசை திருமதி ஆனந்த லிலிங்கத்தின் வழிநடத்தலிலும் சிறப்பாக அமைந்தது.

* அ.ஆ.இ (அரசியல் ஆய்வு இதழ், (நெர்லாந்து), பனிமலர் (லண்டன்), தூண்டில் (ஜேர்மனி), புதுமை (ஜேர்மனி), சுவடுகள் (நோர்வே), சக்தி (நோர்வே), ஓசை (பிரான்ஸ்) ஆகிய சிறுசஞ்சிகைகள் புலம்பெயர்ந்த எழுத்தாளர்களின் ஆக்கங்களுடன் வெளிவருகின்றன என அறகிறோம்.

*******************************************************
செய்திச் சரம்...செய்திச் சரம்...செய்திச்சரம்...
*******************************************************



படிப்பகம்

www.padippakam.com

## ஒருத்திக்காய் ஏன்...

ஒட்டி உறவாடி
சட்டி முத்தமிட்டு
ஒத்த உணர்வினை
பரிமாறியவள் –
"நீயே உறவு
நீயே உலகம்
நின் நினைப்பே எனக்கு"
எனக் கூறியவள் –
தினமும்
உனைக் கண்டே
மலரும் முகத்தினள் –
நீயழ அழுது
நீ சிரிக்க சிரித்து
நீயாய் மாறி
வாழ்ந்தவள் –
இன்று ,
தூ ர . . தூ . . . ர
நடக்கிறாள் !
நீயோ . . . .
காதலின் தோல்வியில்
கரைந்து போகிறாய் !
வாழ்வே முடிந்ததென
வாடிப் போகிறாய் !
செயலே இன்றி
நாட்களை நகர்த்துகிறாய் !
நண்ப ,
வானம் இன்னும் விழவில்லை
பூமி இன்னும் நொறுங்கவில்லை
கோடியாய் மக்கள் . . .
எனில் ,
ஒருத்திக்காய் நீயேன்
ஒடிந்து போகிறாய் . . .

–அழ. பகீரதன்

## புண்ணியம் கிடைக்கும் புறாக்களே...

புறாக்களே பறவுங்கள்
புதுயுகம் நோக்கி
ஒற்றுமை ஒளியை
ஏற்றிச் செல்லுங்கள் !

அன்பினைப் பரப்பி
அகிலத்தை வளர்க்க
உம்மினம் ஒன்றே
உலகுக்கு உதாரணம் !

வளர்முக நாட்டில்
வறுமை வளர
வளர்ந்த நாடுகள்
வளத்தினைச் செலுத்தி
புதிய ஆயுதம்
போருக்குச் செய்ய . . . !

போரில் வெற்றி
போதும் அதுவே
என்ற போட்டியில்
மனித இனம்
மண்ணுக்குள் மாயும் !

அந்நிலை போக்க
அவனியைக் காக்க
"புண்ணியம் கிடைக்கும்
புறாக்களே உமக்கு !

அகிலம் முழுவதும்
அன்பினைப் பரப்ப
வையம் சுற்றி
வலம்மொன்று வாருங்கள் !

– பளைப்புலம் எஸ். யாதவன் –



படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை "நம்பி"

# சிந்திக்க மறுத்த சமூகம்

'அதிகாலை சூரியன் உதிச்ச முதல் நாங்க பொங்க வேணு மெடி பிள்ளை' எனக் கூறியபடி தவமணிப்பாட்டி புதுநெல்லுக் குத்த வெளிக்கிடுகிறாள். மகள் மயூரியோ தாய்க்கு என்ன சொல்வது, தனது வெளிநாட்டுக் கணவனுக்கு இதைப்பற்றி யெல்லாம் எப்படி விளக்குவது என்று தெரியாமல் திக்குமுக்கு ஆடினாள்.

"என்னடி புள்ளை, ஏதோ வாய்க்கை முணுமுணுக்கிறாய்! நான், நீ ஜேர்மனியில இருந்து எனக்கு ஒரு காஞ்சிபுரம் சாறி கொண்டு வருவாய் என எதிர்பார்த்தேன். ஆனால் நீயோ, ஆரோ ஒரு பூஞ்சண் கண்ணனைக் கூட்டிக்கொண்டு வந் ததோடை இரண்டு பூஞ்சண் கண் பிள்ளையளையும் என்ரை பேரப் பிள்ளை எண்டெல்லே சொல்லுகிறாய்' என தனக்குள் முணு முணுத்துக்கொண்டாள் தவமணிப்பாட்டி.

'இந்தக் கிழவிக்கு என்னத்தை சொல்லித் தெரிய வைக்கிறதோ தெரியாது' என எண்ணியபடி, " ஆச்சி, இது பத்தொன்பதா வது நூற்றாண்டில்லையணை. நாங்கள் இப்ப 2002ம் ஆண்டில் வாழ்கிறோம். தெரியுமோ" என ஒரு போடு போட்டாள் மயூரி.

"என்ன கோதாரியோ எனக்குத் தெரியாது" என ஒப்பாரி வைத்தாள் தவமணிப்பாட்டி.

"ஆச்சி, உனக்கு இந்த நாகரிகத்தைப் பற்றி ஒன்றும் தெரி யாது போலை. நாங்கள் எல்லாம் அங்கை (ஜேர்மனியிலை) பொங்கல் எண்டால் எங்கடை திருநாள் என்று சொல்லிப்போ ட்டு கேக், விஸ்கி, பிறண்டி எல்லாம் வைத்து எங்களோடை இருக்கிறவை எல்லாரையும் கூப்பிட்டு கொண்டாடிறனாங்கள்" எனச் சொல்லிமுடித்தாள் மயூரி.

தவமணிப் பாட்டிக்கு மகளுக்கு என்ன சொல்வது என்று தெரி யாமல், 'பக்கத்து வீட்டு புவனேசு வீட்டில் வெளிநாட்டிலை யிருந்து வந்த அவளுடைய மகனையும் அந்த வெளிநாட்டுப் பெட்டையையும் பார்ப்போம்' என எண்ணியபடி தனது வீட்டு கேற்றை திறந்தபடி வெளியே போனாள்.



படிப்பகம்

www.padippakam.com

பாதையில் போகும்போது, சாந்தைப் பிள்ளையார் கோவில் டியில் நாலைந்து புதுக்கார்களும், ஏதேதோ வகையான மோட்டார் சைக்கில்களும் கோயில் வாசலில் நின்றன. ஆச்சியும் சனசாலம் றோட்டிலை இறங்காமல் இருந்தமையால் ஒன்றுமே தெரியாமல் கோவிலடியைப் பார்த்தபடி போனாள் அங்கே ஆறெழு பொடியளும் பெட்டையளும் றோட்டிலை நின்று கொண்டு ஏதேதோ வயர்களை தங்கடை காதுகளுக்கை மாட்டிக் கொண்டு நின்று ஆடினதுகளை பார்த்துவிட்டு "முன்னம் கோயிலுக்கு சின்னமேளம் எண்டுசொல்லி கோயில் திருவிழாவுக்கு ஆட்டக்காறிகளை கூப்பிட்டு ஆடவைக்கிறதை மாதிரி இப்ப உது என்ன கூத்து" எனப் பக்கத்தில் போன பழைய வாத்தியாரிடம் கேட்டாள்.

" உது தவமணிப்பாட்டி அப்ப நாங்கள் அகதிகள் என்று சொல்லி வெளிநாட்டுக்கு அனுப்பி வைச்சோம். அதுகள் உந்த குப்பையளைதான் எங்களுக்கு அங்கை இருந்து படிச்சுகொண்டு வந்தவை" என உரக்கச் சொன்னார் வாத்தியார்.

கிழவியும், "சிவ...சிவ.." எனக்கூறியபடி, "உவையள் அப்ப கனடாவுக்கும் ஜெர்மனிக்கும் போகேக்கை நான் எங்கடை வீட்டில சொன்னனான், இஞ்சாருங்கோ, நாங்கள் கண் தெரியாத தேசத்துக்கு அனுப்புகிறோம் இதுகளை. அங்கை என்னத்தை செய்யுதுகளோ எனப் பாடிப்பாடி சொன்னனான். அப்ப என்ர மனிசன் என்ன சொன்னது தெரியுமோ..,
'என்ன சும்மா புலம்புகிறாய், உன்ரை பெட்டை மயூரியோட படிச்ச எந்தப் பொடி அல்லது எந்தப் பெட்டை இப்ப ஊரிலை இருக்குதுகள். இப்ப நாங்கள் உவள் மயூரியை அனுப்பாவிட்டால் ஊரிலை எங்களைப்பற்றி என்ன நினைப்பினம் தெரியுமோ" என்டு சொன்னவர். இண்டைக்கு அதனால என்ன பலன் கிடைச்சிருக்குது என்டதை கண்டு சகிக்க முடியாமல் அந்த மனிசன் ே நேரத்தோடை கண்ணை மூடிவிட்டுது " எனச் சொன்னபடி நடந்தாள் தவமணிப்பாட்டி.

புவனேசு வீட்டுக்கேற்றை திறந்தபடி, "புவனேசு அக்கா, புவனேசு அக்கா உங்கடை நாயைப் பிடியுங்கோ" எனச் சொல்லியபடி நுழைந்தாள்.

நுழையும்போது, ஒரு களிசான் போட்ட பொம்பிளை ஒன்று " வட் டு யு வான்ட் ஓல்ட் லேடி?" எனக்கேட்டபடி கத்-



படிப்பகம்

www.padippakam.com

திச்சொண்டு வந்தாள். அவள் வந்த நிலையைப் பார்த்த தவ மணிப்பாட்டி, ' முன்னம் வீடுசளில நாயை வளத்தோம் இப்ப அதுசள் தேவையில்லை. இதுசள் இங்கை இருக்குது' எனத்தனக் குள் நினைத்தபடி, "பிள்ளை புவனேசு அச்சாவை ஒருக்காப் பாக்ச வேணும். எனக்கூறினாள்.

இவள் என்ன சொல்லுகிறாள் என்பதையே சவனிக்காமல் வீட்டுக் குள்ளே சென்றாள் அந்த வெளிநாட்டாள் .
அவள் உள்ளே போனதும் அங்சே ஏதேதோ கூட்டமாய் ஆட்சள் நின்று கொண்டு டான்ஸ் ஆடுவதும், றேடியோ பெரிய ஒலியில் சதறுவதும் சேட்டது.

'என்ன சோதாரிதான் நடக்குதோ தெரியாது' என நினைத் தபடி வீட்டை திரும்ம வெளிக்கிட்ட தவமணிப் பாட்டியை மாட் டுத்தொழுவத்தில் நின்று பார்த்த புவனேசு, " என்னணை, நான் இங்கையெல்லே நிற்கிறேன் எனக்கூறியபடி தவமணியை நோக்கி வந்தாள்.

புவனேசு சாதாரணமாச யார் வீட்டை போனாலும், என்ரை மசன் இண்டைக்கு சடிதம் போட்டவன். இரண்டாவது பெட்டை ஏதே பெரிய எக்ஸ்ஸாம் பாஸாம். மற்றவன் சிட்டடியில் டிருக்கு வரப் போறானாம். மசள் சனடாவிலை இருந்து என க்கு பார்சல் அனுப்பினவள் என ஏதோ தன் பிள்ளைசளைப்பற்றி யார் கேட்டாலும் சேளாவிட்டாலும் பொரிந்துதள்ளுவாள். ஆனா ஆனால், இன்று தவமணிப்பாட்டி புவனேசுவை பாத்த போது ஏதோ சவலைதோய்ந்த முசத்தோடு தோன்றினாள்.

"என்ன புவனேசு, ஒரு மாதிரி இருக்கிறாய்?" என ஒரு பே போடு போட்டாள் தவமணிப்பாட்டி.

"ஏனெணை அந்த சருமத்தை சேட்கிறியள். நான் இதுவரையும் என்ரை பிள்ளையளைப்பற்றி எவ்வளவு சொல்லிப் புழுகிச்சொண்டு இருந்தனான். ஆனால் அதுசள் உங்க என்ன செய்யுதுசள் தெரி யுமோ?" எனச் சேட்கும் போதே அழுகை வருமாப் போல இருந்தது.
"ஏன் புவனேசு, அதுசள் வெளியிலை இருந்ததுசள், அப்படித் தான் இருக்கும்" எனச்சமாதானப்படுத்தினாள்.



படிப்பகம்

www.padippakam.com

"என்ன சொல்லுகிறியள், திருவெம்பாவை காலத்திலை எப்ப வாவது என்ரை வீட்டிலை மச்சமாமிசம் சமைத்தது உனக்கு தெரியுமோ, இண்டைக்கு உங்க என்ன நடக்குது தெரியுமோ, பிறந்த நாளாம், பிறந்தநாள்..கண்டறியாத பிறந்த நாள். அதுக்கு மாட்டு இறைச்சி வேண்டிக் கொண்டு வந்து ஏதேதோ எல்லாம் செய்து வைச்சிருக்கினம். அதோடை உவள் வெளி நாட்டாள் எல்லாப்பொடியளுடனும் சேர்ந்து கட்டிப்பிடிச்சபடி டான்ஸ் ஆடுகிறாள். அதோடு, அவளும் சேர்ந்தல்லே குடிக் கிறாள். இந்தக்கருமங்கள் தான் ..இப்பிடி வருமெண்டு தெரிந் திருந்தால் ஒருக்காலும் நான் உதுகளை வெளிநாட்டுக்கு அனுப்பியிருக்க மாட்டேன். தவமணியக்கா" எனச்சொல்லி முடித்தாள்.

"அதையேன் கேட்கிறாய் புவனேசு, நேற்று பிள்ளையார் கோயிலடியில் ஒரு பத்து பதினைந்து பொடியளும் பெட்டையளும் சேர்ந்து கொண்டு இருந்து ஏதேதோ புகையை பிடிச்சு இழுத் தவையாம். அதற்குப்பிறகு அதுகளுக்கு தாங்கள் எங்கை நிற் கிறோம் என்ன செய்கிறோம் என்று தெரியாதாம். ஏன் உடுப் புக்கூட இல்லாமல் இருந்ததுகளாம். அதையேன் கேட்கிறாய் என்ரை மகள் சொல்லுகிறாள் தாங்களும் தைப்பொங்கல் பொங்கிறவையாம். அவை விஸ்கி, பிறண்டி, கேக் எல்லாம் வைத்து தைப்பொங்கல் கொண்டாடுகிறவையாம். இதுகளுக்கு எங்கை தெரியப் போகுது, எங்கடை பண்பாடும் அதிலை பொதிந்திருக்கிற தத்துவங்களும் வெளி நாட்டான்கள் எல்லாம் நிம்மதி தேடி அலைந்து கடைசியா எங்கடை வாழ்க்கைமுறை தான் சரியான வாழ்க்கைக்கும், நிம்மதி தேடி தரக்கூடியதும் எனச் சொல்லிக்கொண்டு இங்கை வருகிறான்கள்" என்று கூறி முடித்தாள் தவமணிப்பாட்டி.

" ஓமெணை தவமணியக்க, மழையைத் தந்து நெல்லை விளை விக்கக் காரணமா இருந்த சூரிய பகவானுக்கு நன்றி செலுத் துகிறதற்கு கொண்டாடிய தைப்பொங்கலின் அருமை உதுகளுக்கு எங்கை தெரியப் போகுது. அதோடை ஒரு புதினம் தெரியு மோணை, உந்த இராமநாதனின் பெட்டைக்கு நாலுபிள்ளை யளாம். ஆனால், அந்தப் பெட்டைக்கு கூட யார் தன்னுடைய புரிசனெண்டு தெரியாதாம். இன்னும் எத்தனை நாசங்கள் கிடக் குதோ தெரியாது. இதயெல்லாம் அண்டைக்கு நாங்கள் சிந்திச் சிச்ச மறந்தது தான் எல்லாத்துக்கும் காரணம்" எனக்கூறி முடித்தாள் புவனேசு.

--------யாவும் கற்பனையே--



படிப்பகம்

www.padippakam.com

# லக்ஷ்மம்மா

— மணி —

மல்லிகைப் பந்தலின் கீழ் குந்தியிருப்பவளே
ஏ லக்ஷ்மம்மா,
இத்தனை சோர்வுடனே
தோன்றுவதேனடியோ?
உன் வேய்ந்த குடிசையினைக்
காற்றுத் தூக்கி எறிந்தாச்சு.
பனிக்குளிர்க்காலம்
பாய் ஒன்றுனக்கில்லை.
இளமையின் களையை
உன் முகம் இழந்தாச்சு.
ஏ லக்ஷ்மம்மா,
நடுநடுங்குகிறாய் கடுங்குளிரினிலே
உன் பிள்ளை உயிருடனோ,
இல்லை இறந்தானோ?

தஸரா வந்தது,
நீ கொண்டாடவில்லை
தீபாவளி வந்தது,
தீபம் உனக்கில்லை.
சிவராத்திரி வந்தது,
விரதம் பிடிக்கின்றாய்.
உன் வாழ்க்கை முழுவதுமே
சிவராத்திரி என்றாச்சு.
ஏ லக்ஷ்மம்மா,
உன் வாழ்க்கை முழுவதுமே
அமாவாசை எனவாச்சு.

எத்தனை நாள் அழுவாய்?
புலம்பி எதனை வென்றிடுவாய்?
உன் சோதர சோதரியர்
செஞ்சேனையிலே இணைந்தார்.
தங்கள் அரிவாளை
அவர்கள் கைகளில் தூக்கிவிட்டார்.
தீட்டிடுவாய் நீயும்
ஏ லக்ஷ்மம்மா—
உந்தன் மகனுடனே நீயும் இணைந்திடுவாய்.

(தெலுங்குக் கவிதையொன்றின் ஆங்கிலமொழியாக்கத்தின் தமிழ் ஆக்கம்)



படிப்பகம்

www.padippakam.com

# நூலவரி

1. கங்கையில் மிதந்து வரும் மனிதக்கவிதைகள் - 1990

ஈழகணேஸ் எனும் புனை பெயருள் ஒழிந்திருந்த சுரேந் தர் தருமலிங்கம் எழுதிய தன்னை இனங்காட்டும் கவிதை களின் தொகுப்பு. மானுடத்தின் மகிமையை உணர்ந்த பல கவி ஞர்களுள் ஒருவர். விலை12ரு வெளியீடு: புதுக்கவிஞர் அணி சி. இடம்: சோலை புத்தக நிலையம், எண். 189, மத்திய வீதி, கொழும்பு-12

2. ராத்ரி-ஓப்னு அஸமமத் - 91

24 பக்கங்களில் 43புதுக் கவிதைகளின் தொகுப்பு.

"வடக்குத் தென்றல்
வீசி வந்தது-
என் தேசத்தில் ரத்தம்"

வெளியீடு: தாகம் வெளியீட் டகம், 156, கிறீன்ஸ் வீதி, திருமலை, இலங்கை.

3. மாடும் கயிறுகள் அறுக்கும்

இலங்கையின் மூத்த, தலை சிறந்த கவிஞரான இ. முருகை யனின் கவிதைகளின் தொகுப்பு பல்முனை நுணுக்கம் பொ திந்த மூன்று தசாப்தகவிதை கள்.

'சடுதியம்' நாடகமும் உள்ளடங்கல்.

4. கூனற்பிறை

'லாவ் உசு'வின் சீனக்குறு நாவல். சே. கணேசனின் சிறந் த மொழியாக்கம்.

5. எத்தனை நாள் துயின்றிருப் பாய் என்னருமைத் தாய் நாடே'

உறங்கேறிய தேசிய கவி ஞனான பெட்டோவ்ஃபியின் கவிதைகள். மொழியாக்கம் செய்தவர் ஈழத்தின் பிரபல கவிஞரும் எழுத்தாளருமான சே. கணேசு.

4. இளைஞர் எர்கையின் திருமணம்

ஜௌஙு லி எழுதிய சீனக் குறுநாவல். இக்கதையின் கரு ஒர் உண்மை நிகழ்ச்சியின் அடிப்படையில் தோன்றியது. இதுவும் சே. கணேசனின் மொழிபெயர்ப்பு.

மேற்கண்ட நாலு நூல்களும் வெளியீடு: தேசிய கலை இலக்கிய பேரவை, சென்னை புக்ஸ்.

7. வில் பிறந்த கதை

ராஜம் புஸ் பவனம் எழு திய வில்லுப்பாட்டுப் பற்றிய நூல்.



படிப்பகம்

www.padippakam.com

# கடதாசிப் பூக்கள்

பூசைகள் பல செய்திடுவர்
நேர்த்திகள் பல வைத்திடுவர்
தம்மை மாற்றிடுவர் – பல
மக்களை ஏமாற்றிடுவர்.

கோயிலுக்கென கோடியாய் சேர்ப்பர்
வீட்டுக்கோடியில் பாதியைப் புதைப்பர்
சாதியிரண்டென சாற்றிடுவர்
வீட்டினில் பாத்திரம் பிரித்திடுவர்.

அகத்தே ஆயிரம் அழுக்கிருக்க
புறத்தே புதிய வடிவெடுப்பர்
சிறையில் சிக்கா சிறுத்தையிவர்
அறையில் அரிவையர் கண்ணீர் வடிப்பர்.

உடையில் வெள்ளை மடிப்பிருக்க
உள்ளே கறையும் கரியுமிருக்கும்
கையுறைக்கு எதிரியென்பர்
பை நிறைய பணம் சேர்ப்பர்.

உயர்வாக சத்தியம் உண்மையென்பர்
பண்பும் பணிவும் பயன் ஈயுமென்பார்
கண்ணிலா வஞ்சக நெஞ்சுடன்
பண்ணிடுவர் எண்ணிலாப் பாவம்

ஓ இறைவா!
இவர் புண்ணியம் பண்ணிட,
அழுக்ககற்றி
இவர் சேவைகள் செய்திட
சிறுமைகள் அகற்றி
இவர் புதுமைகள் புரிந்திட
கொடு அருள் இறைவா

– பேரன் –

*ஐ.நா பாதுகாப்பு சபையின் 678ம் இலக்க தீர்மானத்துக்கமைய குவைத்திலிருந்து ஈராக்கை வெளியேற்றுவதென்பதை வளைகுடா யுத்தம் சட்டபூர்வமாக்கிற்று. 1967ம் ஆண்டில் 242ம் இலக்க தீர்மானத்தின்படி இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து வெளியேறவேண்டும் என்பதை முன்வைத்தது. ஆனால் இவ் 242ம் தீர்மானத்தில் ஒரு திகதியோ திகதி நிர்ணயமோ செய்யப்படவில்லை. ஆனால் இந்த 23 வருடங்களாக ஐ.நா சபையின் மனதில் இது பற்றி எதுவும் வைத்திருக்கவில்லை.

—ஏசியாவீக்



படிப்பகம்

www.padippakam.com

# பார்வை

கடம்பன்

## ரூபவாகினி நாடகங்கள்

தொலைக்காட்சியில் தமிழ்நாடகங்கள் இரசிக்கும்படியாக இல்லை என்பது பரவலான குற்றச்சாட்டாக இருப்பினும் அண்மைக்காலத்தைய சில முயற்சிகள் திருப்தியையும் திருப்பத்தையும் தருவதாக இருக்கின்றன.

சே. கோவிந்தராஜின் 'மலையோரம் வீசும் காற்று( இயக்கம் சே. விக்கினேஸ்வரன்) தெளிவத்தை யோசப்பின் காணிக்கை (இயக்கம். எஸ். ராமதாஸ்) எஸ். ராமதாஸின் 'எதிர்பாராதது' (இயக்கம்: எஸ். ராமதாஸ்) அருணா செல்லத்துரையின் 'திருப்பங்கள்' என்பவற்றை அந்த வகையில் குறிப்பிடலாம்.

மலையோரம் வீசும் காற்று, காணிக்கை' இரண்டும் மலையகச் சூழலில் மலையக மக்களின் வாழ்க்கையைக் கருவாகக் கொண்டமைந்தன. முன்னது தொடர்நாடகம், பாராட்டத்தக்க முயற்சி. ராஜபாண்டியன், எஸ். ராமதாஸ், தனரத்தினம் இன்னும் பலரின் நடிப்பாற்றலை இனங்காட்டியது. டக்ளஸ், ஏஞ்சலா, சந்திரகாந்தன் போன்ற புதுமுக நடிகர்களைத் தந்தது. 'காணிக்கை, எதிர்பாராதது எஸ். ராமதாஸின் கும்மாளக் கோமாளிகளினின்றும் மாறுபட்ட சமூகத் தன்மையுடையதாக அமைந்தன. எஸ். செல்வசேகரன் (உபாலி) தனது நடிப்பாற்றலினால் எல்லோரையும் விட மிஞ்சுகிறார். 'உறவுகள் என்ற இன்னொரு நாடகத்திலும் இவரது நடிப்பு போற்றும் வகையில் அமைந்தது.

'எதிர்பாராதது', 'திருப்பங்கள்' இரண்டும் கொழும்பு சூழலில் அமைந்த நாடகங்கள். இதில் திருப்பங்கள் பார்த்த அனைவர்களாலும் போற்றப்பட்டதெனலாம். தற்போதைய கொழும்பு வீடுகளில் நடக்கும் கதை. பார்க்காதவர்கள் ஏமாறும் வகையில் பார்த்தவர்கள் புகழ்ந்துரைத்தனர். இலங்கையின் பல ரசிகர்களைக் கொண்ட சே. எஸ். பாலச்சந்திரன், கமலினி செல்வராஜன் ஆகியோர் இதில் நடித்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் நாடகங்கள் கிராமச்சூழலில் அமையும் போது சிங்கள நாடகங்கள் போன்று யதார்த்த பூர்வமாக தயாரிக்கப்படும் போது மேலும் ரசனைக்குரியதாக அமையும் என்பது திண்ணம். வடக்கு-கிழக்கு வாழ் கலைஞர்களின் முழுமையான பங்களிப்பை பெற்று தொலைநாடகங்கள் தயாரிக்கும் போது தமிழ்நாடகங்கள் முழுமைத்துவம் அடைந்ததாக அமையும்.



படிப்பகம்

www.padippakam.com

அனுபவம்

# பயணம்

-நேசந்திரா

புகைவண்டிப் பிரயாணம் எனக்கு அன்றுதான புதிது. 28ந் திகதியன்று அதிகாலை நான் ஆவலுடன் எனது புகைவண்டியினூடாக எனது கன்னிப்பயணத்தை ஆரம்பித்தேன். எனக்கு வயது 29 ஆகிறது. இதுவரையில் நான் புகைவண்டியில் பிரயாணம் செய்தது கிடையாது. அதனால் புகைவண்டியில் பிரயாணம் செய்யவேண்டும் என்ற நீண்டநாள் ஆசை அன்று நிறைவேறுகிறது என்று எனது மனம் மகிழ்ச்சிக்கடலில் குதித்துக் கொண்டிருந்தது.

வயல் வெளிகளினூடு, அடர்ந்த காடுகளினூடு, மலைகளினூடு புகைவண்டி செல்லும் என்று கேள்விப்பட்டதை நான் அன்று அனுபவித்துக் கொண்டிருந்தேன்.

அதற்குமுன் எனது பயணப்பாசல்களுடன் புகைவண்டிநிலையத்தினுள் நுழைந்தேன். ஆட்கள் முண்டியடித்துக் கொண்டு வண்டியில் ஏறிக்கொண்டிருந்தார்கள். நான் சீற் இருக்கும் இடம் தேடி ஒவ்வொரு பெட்டியாய எட்டிப்பார்த்தவாறு நடந்து கொண்டிருந்தார்கள். நான் சீற் இருக்கும் இடம்தேடி ஒவ்வொரு பெட்டியாய் எட்டிப்பார்த்தவாறு நடந்து கொண்டிருந்தேன். பின்னால் யாரோ அழைத்தார்கள். "இங்க வா, அங்க சீற் இருக்கிறது" அவரின் பின்னால் போனேன். உண்மையில் அவர் கூறியவாறு அங்கே சீற் அல்ல. சீற்றுகள் இருந்தன. என்றுதான் சொல்லவேண்டும். அவ்வளவிற்கு அவைகள் காலியாயிருந்தன. என்னோடு சேர்ந்து நாலுபேர். அவர்களும் அந்தப் பெட்டியில் ஏறிக்கொண்டார்கள். இவ்வளவு கனத்திலும் அவர் எனக்கு சீற் பிடித்துத் தந்துவிட்டார் என்று நான் மனதினுள் மகிழ்ச்சியடைந்தேன். இடையில் இது மாகோவில் மாறக்கூடும் என்று அவர் ஒருமுறை சொன்னார். நாங்கள் சீற் கிடைத்த சந்தோசத்தில் அதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை.

வயல், காடு, மலை, குகை என்பவற்றினூடு வண்டி சென்று கொண்டிருந்தது. பெட்டியின் வாசலில் வந்து நின்றவாறு நான் அவற்றைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தேன்.

வண்டி பொல்காவலையைத் தாண்டி ஓடிக்கொண்டிருந்தது. என்னோடு சேர்ந்து வந்தவர்களை நான் எட்டிப்பார்த்தேன் அவர்கள் வசதியான சீற்றில் வசதியாக தூங்கிக்கொண்டி-



படிப்பகம்

www.padippakam.com

குந்தார்கள்.

திடீரென புகைவண்டியில் ஏதோ ஒன்று இடித்தாற்போல சத்தம். வண்டி ஒருமுறை குலுங்கியவாறு திடீரென்று ஒரு வயல் வெளியில் நின்றது. நான் என்னவோ ஏதோ என்று பயந்து போனேன். கொள்ளையர் சுத்திப்போட்டு மறித்து கொள்ளையடிக்கிறது ஒரு முறை எனது ஞாபகத்திற்கு வந்து போயின. நாங்கள் இருந்த பெட்டி றெயினின் பின்னால் உள்ளது. முன்னால் உள்ளவர்கள் சிலர் இறங்கி பின்னால் ஓடிவந்தார்கள். அவர்கள் நாங்கள் இருந்த பெட்டிக்குப் பின்னால் சூழ்ந்துகொண்டார்கள் நான் பயந்துபோய் தூங்கிக்கொண்டிருந்தவர்கள் பக்கம் போய் நானும் தூங்குவதுபோல் பாசாங்கு செய்தேன். நடக்கிறது நடக்கட்டும் என்று நினைத்தேன்.

இரண்டு நிமிடம் கழிந்தது. ஒன்றும் நடக்கவில்லை. ஆனால் நாங்கள் இருந்த பெட்டியின் பின்னால் தண்டவாளத்தை சுற்றிய வாறு பலர் கூடியிருந்தார்கள். நான் மெதுவாக வாசலில் வந்து எட்டிப்பார்த்தேன். ஏதோ விபத்து நடந்துவிட்டது என்று கசித்துக் கொண்டேன். இறங்கி அவ்விடத்தை நோக்கி நடந்தேன்.

ஒரு மனித முண்டம். தலையில்லை. அது சிறிது தூரத்தில் கிடந்தது. இரண்டு கையும் முழங்கையுடன் இல்லை. இரண்டு தண்டவாளத்துக்கும் இடையில் இருந்தது. றெயில் இனிப்போ–காதுபோல என்று நான் நினைத்துக் கொண்டேன். ஒருசிலர் அந்த முண்டத்தை தூக்கி கரையில் தென்னோலையால் மூடினார்கள். 15 நிமிடத்திற்குப்பின் புகைவண்டி நகரத் தொடங்கியது. அப்போது மனம் ஆறுதலடையந்தது.

இதற்கிடையில் தூங்கியவர்கள் விழித்துக் கொண்டார்கள். அவர்கள் விசயத்தைக் கேள்விப்பட்டதும் அதில் ஒருவயதான பெண் நாங்கள் கஸ்ரப்படப் போகிறோம். அதற்கு சகுனம் தான் இது என்று புலம்பததொடங்கினாள். "எங்களுக்கு மட்டுமே இது எல்லாருக்கும்தான்." என்று நான் சமாதானம் செய்தேன். என்னுடைய கருத்தை அவளுடன்கூட வந்த புருசன் காறனும் வரவேற்றான்.

புகைவண்டி அமைதியாக ஓடிக்கொண்டிருந்தது. அவர்கள் மீண்டும் தூங்க ஆரம்பித்தார்கள். எனக்கும் அந்த மனிதமுண்டத்தை பார்தத அருவருப்பினால் வந்த மனச்சோர்வு என்னையும் நித்திரை தூக்கியடித்தது. அவர்களின் சீற்றருகில் போய் நானும் தூங்க ஆரம்பித்தேன். வண்டி ஓடிக்கொண்டிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

நாங்கள் நல்ல நித்திரை. எவ்வளவு நேரம் நாங்கள் நித்திரைகொண்டோமோ அல்லது வண்டி எவ்வளவு தூரம் ஓடியதோ தெரியாது. ஆனால் ஓரிடத்தில் வண்டி நின்றுகொண்டிருந்தது போன்ற உணர்வு மாத்திரம் எனக்கு வரநான் எழும்பி எட்டிப்பார்த்தேன். "மாகோ" என்று போட்டில் எழுதப்பட்டிருந்தது. றெயினில் ஏறும்போது எனக்கு சீற்பிடித்து தந்தவர் ஞாபகம் வர நான் இறங்கிப்பார்த்தேன், அப்படி மாறுகிறதா என்று.

உண்மையில் அது நடந்துமுடிந்தது. நாங்கள் இருந்த பெட்டியுடன் இன்னொரு பெட்டியையும் சேர்த்து கழட்டிவிட்டு றெயில் நகர்ந்துகொண்டிருந்தது. இரண்டு பெட்டியும் தண்டவாளத்தில் அநாதரவாய் விட்டுவிட்டு றெயில் அனுராதபுரத்தை நோக்கி ஓடிக்கொண்டிருந்ததை நான் பயமும் கவலையும் கலந்த உணர்வுடன் பார்த்துக்கொண்டிருந்தேன். அநாதரவாய் விடப்பட்ட அந்தப் பெட்டியினுள் என்னோடு சேர்ந்துவந்த நாலு பேர் அநாதைகளாய் இருந்தார்கள். (இல்லை நிலைமறந்து தூங்கிக்கொண்டிருந்தார்கள்) நான் கத்தினேன். "அது விட்டு விட்டுப் போய்விட்டது. இறங்குங்கோ". அவர்கள் முழிகள் பிதுங்கத் திகைத்தார்கள். உண்மையில் அவர்கள் பயந்துவிட்டார்கள். உடம்பெல்லாம் அவர்களுக்கு வேர்வை பாய்ந்தோடியது. அதையுணர்ந்த நான் சிரித்தேன். சமாளித்துக்கொண்டேன். "ஆ.. பரவாயில்லை, இப்ப லோக்கல் றெயின்வரும். திரும்பி கொழும்புக்கு போவோம்" என்றேன்.

இல்லை, கார் பிடித்துக்கொண்டு அநுராதபுரம் போவோம் என்று அந்தப்பெண்மணியின் கணவர் கூறினார். அதற்கு நான் சம்மதித்தேன். அந்த நேரத்தில் அந்தப்பெண்மணியை நான் கவனித்தேன். அவள் வியர்வையால் குளித்துவிட்டாள். (அவ்வளவுக்கு பயந்து போயிருந்தாள்) அது சிங்கள ஏரியா என்றபடியால் தன்னை ஓர் தமிழச்சி என்று அந்த சிங்களச்சனத்திற்கு தெரிந்துவிடுமோ என்ற பயத்தினால் அவள் நெற்றியிலிருந்த பொட்டை அழித்துவிட்டாள். அந்தப்பெண்மணியின் மகளும் மகனும் பேயறைந்தவர்கள்போல் காணப்பட்டார்கள்.

இதற்குள் நான் ஆசைப்பட்ட புகைவண்டிப்பிரயாணம் இடைநடுவில் கைகூடாமல் போனதை எண்ணி நான் ஒருதரம் கவலைப்பட்டேன்.

எங்களைப் போல இருவர் (றெயிலை கோட்டைவிட்டவர்கள்) கானைநகர் களபூமியைச் சேர்ந்தவர்கள் எங்களுடன்வந்து சேர்ந்தார்கள். அவர்களும் எங்களைப்போல பெரிய பாசல்-



படிப்பகம்

www.padippakam.com

களுடன் வந்தார்கள். எல்லோருமாக ஏழுபேர்.

இரண்டு கார் பிடித்து இரண்டுக்கும் 1800ரூபா றேட் பேசி அனுராதபுரம் நோக்கி காரில் பிரயாணம் தொடங்கியது. நானும் அந்தப் பெண்மணியின் மகனும் மற்றும் இருவரும் ஒரு காரில் பிரயாணம் செய்தோம். பெண்மணியும் அவள் கணவர், மகள் மற்றைய காரில் பிரயாணம் செய்தார்கள். எங்களது கார் றைவர் ஓர் இளைஞன். அவர்களுடைய கார் றைவர் ஒரு வயதுபோன கிழவன். அவர் மெதுவாக காரை ஓட்டிவந்தார். இடைநடுவில் கிழவனின் கார் காத்துப் போய்விட்டது. ஏற்கனவே பயந்துபோய் இருந்த அந்தப்பெண்மணிக்கு மேலும் இது பயத்தைக் கூட்டியது. மாகோவிலிருந்து அநுராதபுரம் வரையான 50மைல் பிரயாணத்தை மனதில் மரணபீதியை சுமந்தவாறு ஒருவாறு அநுராதபுரம் வந்தடைந்தோம்.

எங்கள் கார்றைவர் (பொடியன்) நல்லவன். நாங்கள் பயப்பிடுகிறோம் என்று தெரிந்து சொக்சைக்குமியில் எங்களைத் தெம்பூட்டினான். அது மாத்திரமல்ல. ஆமிச்செக் பொயின்றில் எமது நிலையை அவர்களுக்கு சொல்லி சில தொல்லைகளைத் தவிர்த்துக்கொள்ள உதவினான். அநுராதபுரத்தில் அவன், அந்தக் கிழவன் எங்களிடம் கைகுலுக்கி உருக்கமாக விடைபெற்றான். அநுராதபுரத்தில் இறங்கியபோது நேரம் 11.30. மாகோவில் நின்றபோது நேரம் 8.30.

இண்டைக்கு வீட்டபோக ஏலாது. வவுனியாவில் ஆமியின் அகதிமுகாமில்தான் இண்டைக்கு தரிக்கவேணும் என்று தீர்மானித்தோம்.

அநுராதபுரத்திலிருந்து வவுனியாவிற்கு 600ரூபாவிற்கு ஒரு வான் பிடித்தோம். ஆமி செக் பொயின்றில் எங்கள் பொதிகளை கொட்டிக்கிளறிக்காட்டியதில் நாங்கள் எல்லோருமே களைத்து மூச்சு வாங்கினோம். அநுராதபுரத்திலிருந்து வவுனியாவரை ஆறு செக் பொயின்றில் எங்கள் பொதிகள் கொட்டிக்கிளறிக்காட்டப்பட்டது மாத்திரமல்ல. நான் 500 சொப்பிங் பாக்குகளையும் அவர்கள் ஒரு கலனுடன் மண்ணெயையும் பறிகொடுத்துவிட்டார்கள்.

எமது நிலையை நொந்தவாறு நாம் ஒருவாறு 2.30 மணிக்கு வவுனியா வந்துசேர்ந்தோம்.

வீட்டிற்குப போகலாம் என்று நினைத்தவாறு ஆமிசெக் பொயின்றுக்கு வந்தபோது நாங்கள் எல்லோரும் ஏங்கிப் போய்விட்டோம். அவ்வளவிற்குச் சனம். இரண்டு கியூ. ஒன்று-



படிப்பகம்

www.padippakam.com

ஆண்களுக்கான . மற்றது பெண்களுக்கானது. இரண்டிலும் சுமாராக 1500 பேரளவில் நீண்டவரிசையில் நின்றிருந்தார்கள். நான் அகதிமுகாமிற்கு போவோமோ என்றுகூட ஒருமுறை யோசித்தேன். அப்போது ஒருவன் சொன்னான். கொழும்பிலிருந்து வாறன் என்று சொன்னால் முன்னுக்கு விடுவான்' என்று ..அவன் சொற்படி கியூவில் அருகில் போய் நின்றோம். அப்போது கியூவில் நின்றவர்கள் எங்களைப்பார்த்து பேசத் தொடங்கிவிட்டார்கள். நாங்கள் அவர்களுடைய பேச்சைக் காதில் வேண்டிக் கொள்ளாது நின்றோம். நாலைந்துபேர் சேர்ந்து எங்களைப் பேசத் தொடங்கிவிட்டார்கள். அதைக் கவனித்துவிட்டான் ஒரு தமிழ்ப்பொலிஸ்காரன் ஓடிவந்து , கொழும்பிலிருந்தா வாறீங்கள் ஏன் இவ்வளவு லேட்" என்று கேட்டான். நாங்கள் உண்மையைச் சொன்னோம். அதைக் கேட்ட அவன் எங்களை முன்னே கூட்டிச்சென்றான். அங்கு ஒரு பொலீஸ் இன்ஸ்பெக்டர் எங்களை செக்பண்ணி உடனே அனுப்பிவிட்டான். அந்தப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் என்னுடைய அரைவாசிப் பொருளைப் பார்க்காமலேயே அனுப்பிவிட்டான். எங்களுக்கு அது ஓர் ஆறுதலாக இருந்தது.

மாலை 3.15க்கு பொடியளின் செக் பொயின்ருக்கு வந்து பஸ் ஏறினோம். பேயாடி கூளான்குளத்திலிருந்து பஸ் மாலை 6.30ற்கு சங்குப்பிட்டி நோக்கி புறப்பட்டது. இரவு 11.30ற்கு சங்குப்பிட்டிக்கு வந்து சேர்ந்த நாம் கேரதீவிலிருந்து ஐந்து பேருக்கும் 1100/ ரூபாவிற்கு ஓட்டோ பிடித்து நடுச்சாமம் 12.30ற்கு வீட்டிற்கு வந்துசேர்ந்தோம்.


**************************************

* யாழ்ப்பாணத்தில் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி மாணவர் அமைப்பொன்று 'மாற்றம்' எனும் நாடகத்தை அண்மையில் யாழ்.இந்துக் கல்லூரி கண்காட்சியில் மேடையேற்றியது. இதில் முகம்முடிப பாத்திரங்கள் -பெரிய அளவில் வரையப்பட்டு- பங்குபற்றியது அண்மைக்கால நாடக வரலாற்றில் புதுமை! முன் இடது வலதுபக்க மேடையில் நிலப்பிரபுத்துவ பாத்திரங்களும் தரகுமுதலாளித்துவ பாத்திரங்களும் இம்முகமுடிகளை அணிந்தினர். பெருந்தேசிய புத்தரினுடைய முகமுடியை பின்மேடையில் பெரிய அளவில் அணிந்திருந்தனர். இவர்களுக்கிடையில் மக்கள் படும்இன்னல்களை காட்டியதுடன் வாழ்வுமுறைக்கேற்ற கல்வியின் அவசியத்தினையும் வலியுறுத்தினர்.

********* ****************** *********

படிப்பகம்

www.padippakam.com



காலைக் கதிர் சந்தா விபரம்

இதழ் விலை 5.00
ஒரு வருட சந்தா 60.00

வெளிநாடுகளுக்கு சந்தா தொகை
தபால் செலவுகளுக்கு ஏற்றவகையில்
அறவிடப்படும்.

வெளிநாட்டில் வதியும் மன்றத்தினரோ
அல்லது காலைக் கதிர் வாசகர்களோ
உங்களது சந்தாவை செலுத்தி தொடர்
சியாக நீங்கள் காலைக்கதிர் வாசகர்
களாக இருப்பதோடு காலைக் கதிரின்
வெளியீட்டுக்கு உதவியவர்களாகவும், இரு
ப்பீர்கள். காலைக் கதிர் இதழுக்கு உங்
கள் ஆக்கங்களும் எதிர்பார்க்கப்படுகின்
றன. சிறார்களின் கதை, கவிதை, சித்தி
ரம் ஆகியனவும் பிரசுரிக்கப்படும்.
மன்றச் செயற்பாடுகள், உள்ளூர் புதினங்
கள், இலங்கையில் நடைபெறும் முக்கிய
செய்திகளையும் உள்ளடக்கியதாக எமது
இதழ் தொடர்ந்து வரும். காலைக்கதிர்
ஓர் கிராமிய ஒளிபரப்பி அதனை முன்
னேற்றத்திற்கு பாடுபடும் ஓர் வெளியீடு
ஆகும்.

நன்றி.....

காலைக் கதிருடனா தொடர்புகட்கு,

காலைக் கதிர்
த.பெ.இல 162
தெரழுப்பு